ஆர்.எஸ்.எஸ். எப்போதும் ஒரே வடிவில், ஒரே செயல்திட்டத்துடன் இருப்பதில்லை!

தத்துவார்த்தப் பார்வையின்றி 'நடப்புப் பிரச்சினைகளை எதிர்க்கிறார்கள்' என்பதற்காக எவரையும் ஆதரித்துவிட முடியாது!

'கரப்பான் பூச்சி ஜனதா' பற்றி திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 13-

"நாம் எதிர்க்கும் பா.ஜ.க.வை, தத்துவார்த்தப் பார்வையில் அல்லாமல் சில நடப்புப் பிரச்சினை களுக்காக சி.ஜே.பி. எதிர்க்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, அந்தக் குழுவை சமயோசிதமாக ஆதரிக்கலாம் என்று (Political Expediency) எவரையும் ஆதரித்துவிட முடியாது. இளைஞர்களின் எதிர்ப்புணர்வையும், போராட்டங்களையும் நாம் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை என்றாலும், அவசரப்பட்டு விழுந்து ஆதரிக்க வேண்டியதில்லை. 'கரப்பான்பூச்சி ஜனதா' கொஞ்சகாலம் கண் காணிப்பிலேயே இருக்கட்டும்" என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கடந்த மாதம் 15 ஆம் தேதி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த், வேலையற்ற இளைஞர்களை கரப்பான் பூச்சிகள் என்றும், ஒட்டுண்ணிகள் என்றும், வேலையில்லாத காரணத்தால் தகவல் அறியும் உரிமைப் போராளிகளாகவும், பொது நல வழக்குத் தொடுப்பவர்களாகவும் கிளம்பிவிட்டார்கள் என்பதாகவும் நீதிமன்றத்திலேயே தெரிவித்தார் என்றொரு செய்தி வெளியானது. பின்னர் அடுத்த நாளே அதனை மறுத்து, "தாம் குறிப்பிட்டது போலிச் சான்றிதழ்கள் பெற்று வழக்குரைஞர்களாகவும், வேலையிலும் இருக்கும் இளைஞர்களைப் பற்றியே என்றும், பொதுவாக அனைவரையும் குறிப்பதல்ல" என்றும் ஒரு விளக்கம், நீதிபதி தரப்பில் இருந்து வெளியிடப்பட்டது.

'காக்ரோச் ஜனதா பார்ட்டி'

ஆனால், அவரது இந்தக் கருத்து இளைஞர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பலையை ஏற்படுத்தியது உண்மை. குறிப்பாக கரப்பான்பூச்சிகள் காக்ரோச்சஸ் என்று அவர் கூறிய வார்த்தையையே கொண்டு 'காக்ரோச் ஜனதா பார்ட்டி' என்ற பெயரில் சமூக ஊடகங்களில் ஒரு பக்கம் உருவாக்கப்பட்டு, அவரது கருத்தையும், நாட்டு நடப்புகளையும் எள்ளல் தொனியில் பரிகசிக்கும் பதிவுகள் வெளியிடப்பட்டன. இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்த இந்தத் தலைப்பு எதிர்ப்பு, ஒரே நாளில் பெரும் வரவேற்பைப் பெற்று, பல லட்சக்கணக்கானோர் விரும்பும் சமூக ஊடகப் பக்கமாக மாறிவிட்டது. பாரதிய ஜனதா கட்சிக்கு (பி.ஜே.பி) எதிராக சி.ஜே.பி. என்னும் பெயரில் உருவான இந்தப் பெயர் திடீரென இளைஞர்கள் மத்தியில் பிரபலமாகி, அது ஓர் அமைப்பாக உருவாவதற்கான சூழல் எழும் முன்னே அந்தப் பெயரில் மதுரையில் ஒரு பேரணி எல்லாம்கூட நடைபெற்று முடிந்தது.

இச் சமூக ஊடகப் பக்கத்தை உருவாக்கி நடத்துபவர் யார் என்று தேடி, அமெரிக்காவில் பயிலும் மகாராட்டிராவைச் சேர்ந்த ஊடகவியல் மாணவர் அபிஜித் தீப்கே என்பவர் தான் என்பதை அறிந்து, அவரும் இணையம் வழியாக ஊடகங்களுக்குப் பேட்டியளித்தார். இதனிடையே சி.பி.எஸ்.இ தேர்வு விடைத்தாள் திருத்தக் குளறுபடி, நீட் தேர்வு மோசடிகள் என்று எழுந்த பிரச்சினைகளையும் சி.ஜே.பி. கண்டிக்க, அதனையொட்டி டில்லியில் போராட்டத்தையும் அந்த அமைப்பு அறிவித்தது. போராட்டத்திற்கு அபிஜித் தீப்கே நேரில் வந்தார். பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் புத்தகத்தைத் தூக்கிக் காட்டியபடி அவர் விமான நிலையத்தை விட்டு வெளியில் வரும் காட்சி ஊடகங்களில் வெளியானது. இளைஞர்கள் பலர் பங்கேற்க, புது டில்லி ஜந்தர் மந்தரில் "போராட்டமும்" நடந்துள்ளது.

இளைஞர்களின் சமூகக் கோபம்!

இளைஞர்களின் சமூகக் கோபமும், அது இப்படி பல வடிவங்களிலும் வெளி வருவதும் இயல்பானதே! தொடர்ந்து பல நாடுகளிலும், மாநிலங்களிலும் கூட அமைப்பு ரீதியாக அல்லாத இத்தகைய திடீர் போராட்டங்கள் பேருருக் கொள்வதையும் பார்த்து வந்திருக்கிறோம். எந்தவொரு போராட்டமும், அதற்கான உணர்வும் ஓரிரு பிரச்சினைகளுக்கான உடனடி எதிர்வினையாக அமைவதை மட்டும் வைத்து நாம் முடிவெடுத்துவிட முடியாது.

இந்தியாவில் இத்தகைய திடீர் போராட்டங்களின் வரலாற்றுப் பின்னணி என்ன? அவர்களின் கருத்தியல் அல்லது கொள்கைத் தெளிவு என்ன என்பதைப் பொறுத்து தான், இத்தகைய போராட்டங்களை முன்னெடுப்போர் அல்லது அதன் வழி நடப்போரை மதிப்பிட முடியும். ஏமாந்து விடக் கூடாது.

'இட ஒதுக்கீடு பற்றி சிஜேபி பேச மறுக்கிறதே, சமூக நீதி குறித்தும், ஒடுக்கப்பட்டோர் மீதான பிரச்சினைகள் குறித்தும் இந்த அமைப்பினர் என்ன நினைக்கிறார்கள்?' என்ற கேள்வி எழுந்தபோது, இந்த சி.ஜே.பி. நிறுவனர் அபிஜித் தீப்கே, 'தான் ஒரு தலித்' என்றும், அதுவே போதுமான பதிலைச் சொல்லும் என்றும் 'எக்ஸ்' தளத்தில் தெரிவித்திருந்தார். உடனே, உயர்ஜாதியினர் பலர், அதற்கு மோசமான எதிர்வினைகளை வழக்கம் போல ஆற்றியிருந்தனர். "ஆக, தன்னைத் தானே தலைவராக முன்னிறுத்திக் கொண்ட இந்த ஜென் ஸீ (Gen Z) தலைவர், "தகுதி திறமைக்கு எதிரானவர் அப்படித்தானே!" என்று தொடங்கி, இன்னும் ஏராளமான வசை மொழிகள் வரை பொழிந்துள்ளனர். ஒருவர் தான் என்ன சமூகத்தவர் என்று சொன்னதும், அதைக் கொண்டே அவரை இழிவுபடுத்தும் இந்த மோசமான போக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இளைஞர்களிடமும் ஏராளமாக இருக்கிறது இந்தியாவெங்கும்! முகமூடி புரிகிறதா?

அதே வேளை, 30 வயது கொண்ட அந்த இளைஞர் அபிஜித் தீப்கே, முன்பு டில்லியில் படித்தபோது 2020 முதல் 2023 வரை ஆம் ஆத்மி கட்சியின் ஆதரவாளராக, சமூக ஊடகங்களில் செயல்படுபவராக இருந்திருக்கிறார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஊழல் என்பதை முன்னிறுத்தி, ஆர்.எஸ்.எஸ். பின்புலத்தில் அன்னா ஹசாரே என்பவர் தொடங்கிய போராட்டத்தில் பங்கேற்ற அரவிந்த் கெஜ்ரிவால் போன்ற சிலரால் தோற்றுவிக்கப்பட்டது தான் ஆம் ஆத்மி! அது எப்போதும் சமூகநீதிக்கு ஆதரவாக இருந்ததில்லை, அதன் தலைவர் இடஒதுக்கீட்டுக்கு எதிரானவராகவே ஆரம்ப காலத்தில் சொல்லப்பட்டது கட்சி உருவாகி, ஆட்சியில் அமர்ந்துவிட்ட பின்னரும் கூட இட ஒதுக்கீடு குறித்து எதிரான நிலைப்பாடுகளையே அவர்கள் கொண்டிருந்தார்கள். பொருளாதாரத்தில் நலிந்துள்ள உயர்ஜாதியினருக்கான இடஒதுக்கீடு என்ற பா.ஜ.க.வின் சூழ்ச்சிக்கு ஆதரவாகத் தான் இருந்தார்கள். அத்தகைய அமைப்பை ஆதரித்த ஒருவரை, அவரது சமூகத்தை வைத்து மட்டும் முடிவு செய்துவிட முடியாது.

வெகுஜனப் புத்திக்கு ஊட்டமளிக்கும் ஆர்.எஸ்.எஸ்.

இத்தகைய போராட்டங்களிலும், அமைப்புகளிலும், திடீர் ஈர்ப்பு காரணமாகப் பலர் இணைவதுண்டு. ஆனால், அவர்களின் கொள்கைப் பின்புலமும், பார்வையும் எப்படியிருக்கும் என்பதையும், அதை நெறிப்படுத்தக் கூடியதாக இத்தகைய அமைப்புகள் இருக்குமா என்பதையும் அவசரப்பட்டு முடிவு செய்ய முடியாது. கடந்த காலங்களில் இத்தகைய அமைப்புகள் வெகுஜனப் புத்திக்கு ஊட்டமளிக்கும் ஆர்.எஸ்.எஸ்.சின் பின்புலத்தில் தோற்றுவிக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். தமிழ்நாட்டிலும் கூட அப்படியொரு அமைப்பு ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் 'ஆசீர்வாதத்துடன்' ஆரம்பிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆர்.எஸ்.எஸ். எப்போதும் ஒரே வடிவில், ஒரே செயல்திட்டத்துடன் இருப்பதில்லை என்பதையும் நாம் எச்சரிக்கையோடு நினைவு கொள்ள வேண்டும்.

முறையாகத் திரண்டெழுந்து ஒரு முழுமையான புரிதல் நிறைந்ததாக மாற வேண்டிய எதிர்ப்புணர்வுக்கு வடிகாலாகவும், இத்தகைய சூழலில் அரசுக்கும், ஆதிக்கத்திற்கும் எதிராக இளைஞர்கள் உண்மையான சமூகநீதி, திராவிட, பொதுவுடைமை இயக்கங்களுக்குச் செல்லாமல் மடை மாற்றவும் இத்தகைய அமைப்புகள் உருவாக்கப்படவோ அல்லது கொண்டு செல்லப்படவோ வாய்ப்புகள் நிறைய உண்டு. கடந்த காலங்களின் அனுபவம் அதுவே! பேரெழுச்சியுடன் வந்த சில அமைப்புகள் காலத்தால் காணாமல் போய்விடுகின்றன அஸ்ஸாம் கண பரிஷத் போல!

ஊடகங்கள் உருவாக்கும் பிம்பம்!

ஏற்கெனவே இருக்கும் அமைப்புகள் மீது ஊடகங்கள் உருவாக்கியிருக்கும் பிம்பமும், இளைஞர்களுக்கு இருக்கும் சலிப்புமே இத்தகைய திடீர் அமைப்புகளை நோக்கி அவர்களைக் கொண்டு செல்கிறது. அது நெடுங்காலமாகப் பல்வேறு சூழல்களைப் பார்த்து, எதிர்கொண்டு, அமைப்பை நிருவகித்து, அதன் ஏற்ற இறக்கங்களை அனுபவித்து, கவனமாகச் செயல்பட்டு, பல சாதனைகளைப் புரிந்திருக்கும் அமைப்புகள் மீது ஊடகங்களும், ஆதிக்க வாதிகளும் உண்டாக்கியிருக்கும் திட்டமிட்ட சலிப்புணர்வு. இதையெல்லாம் எதிர்கொள்ளக் கூடிய வர்களா? என்று யோசிக்கும் முன்பு, இதையெல்லாம் எதிர்நோக்கியிருப்பார்களா என்பதே சந்தேகம் தான்! ஆர்.எஸ்.எஸ். ஆக்டோபஸின் கரங்களின் அணைக்கவும், விழுங்கவும், அடிக்கவும், அழிக்கவும் நிரம்பப் பழக்கப்பட்டவை.

எவ்வளவோ பார்த்து விட்டோம்... இதைப் பார்க்கமாட்டோமா?

நாம் எதிர்க்கும் பா.ஜ.க.வை, தத்துவார்த்தப் பார்வையில் அல்லாமல் சில நடப்புப் பிரச்சினை களுக்காக அவர்களும் எதிர்க்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, அந்தக் குழுவை சமயோசிதமாக ஆதரிக்கலாம் என்று (Political Expediency) எவரையும் ஆதரித்துவிட முடியாது. இளைஞர்களின் எதிர்ப்புணர்வையும், போராட்டங்களையும் நாம் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை என்றாலும், அவசரப்பட்டு விழுந்து ஆதரிக்க வேண்டியதில்லை. கரப்பான்பூச்சி ஜனதா கொஞ்சகாலம் கண் காணிப்பிலேயே இருக்கட்டும்! எவ்வளவோ பார்த்து விட்டோம்... இதைப் பார்க்கமாட்டோமா?

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

கனிமொழி கருணாநிதி எம்.பி, தலைமை! ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் ப.ராணி அறிக்கை!

சென்னை, ஜூன் 13-

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு கழகத்துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் தி.மு.க. மாநில, மாவட்ட, மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க.வின் வெல்லும் தமிழ் பெண்கள் திராவிட மாடல் அரசின் தேர்தல் வெற்றிக்காக தமிழ்நாட்டின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பாக பணியாற்றி இருந்த நிலையில் கடந்த 5 ஆண்டுகளில் எல்லோருக்கும் எல்லாம் என சாதனைகள் படைத்த நம் திராவிட மாடல் அரசு எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தது என்று அத்தனைப்பேருக்கும் அதிர்ச்சியும், வேதனையும்ஏற்படுத்தியுள்ளது.

இதிலிருந்து மீண்டு நம்மை பலப்படுத்திக் கொள்ளவும், பல வெற்றி தோல்விகளைக் கண்ட நம் கழகத் தலைவர் நம்மோடு இருக்கிறார் .மீண்டு எழுவோம்!சரித்திரம் படைப்போம் !

நடத்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் இன்று (13/06/2026 சனிக் கிழமை) காலை 10 மணிக்கு கலைஞர் அரங்கம், சென்னையில் கழகத் துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.

தி.மு.க. மாநில, மாவட்ட, மாநகர மகளிரணி மகளிர் தொண்டரணி, தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பா ளர்கள், வலைதள நிர்வாகிகள் அனைவரும் ஆலேசனைக் கூட்டத்தில் தவராது கலந்துகொள்ள அழைக்கிறோம். இவ்வாறு மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொடர் மின்வெட்டால் விளைநிலங்கள் கடுமையாக பாதிப்பு!

பிரேமலதா விஜயகாந்த் அரசுக்கு வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 13 -

தொடர் மின்வெட்டால் விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்ச்சியாக நிலவி வரும் மின்வெட்டு காரணமாக, விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு போதிய நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக பயிர்கள் வாடியதால் விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பையும் வேதனையையும் சந்தித்து வருகின்றனர்.

விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி முழுமையாக செயல்படுத்தப்படாதது ஒரு புறம்; மின் விவசாயிகள் பாதிக்கப்படுவது மறுபுறம். "உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி" என்பதுபோல் விவசாயிகளின் நிலைமை பரிதாபமாக மாறியுள்ளது.

எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

திருப்பூர் மாநகராட்சிப் பள்ளியில் புகுந்து

மரக்கன்றுகள் வழங்குவது போன்று த.வெ.க.வினர் 'ரீல்ஸ்'!

அமைதி காக்கும் பள்ளிக் கல்வித்துறை!

திருப்பூர், ஜூன் 13 -

திருப்பூர் மாநகராட்சி, பெரியார் குடியிருப்பு பகுதியில் மாநகராட்சி அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது. இங்கு மாணவர்களுக்கு சமீபத்தில் தவெகவினர் மரக்கன்றுகள் வழங்குவதாக கூறியுள்ளனர்.

பொதுவாக அரசுப் பள்ளி வளாகங்களுக்குள் அரசியல் கட்சியினர் நுழைவதற்கோ, கட்சி சார்ந்த விளம்பரங்களை மேற்கொள்வதற்கோ பள்ளிக் கல்வித்துறை கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. குறிப்பாக, பள்ளி நேரங்களில் வெளிநபர்களோ அல்லது அரசியல் அமைப்பைச் சேர்ந்தவர்களோ கல்வி அதிகாரிகளின் முறையான அனுமதியின்றி பள்ளி வளாகத்திற்குள் நுழையக்கூடாது என்றும், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் தனிமனித உரிமை கருதி அவர்களைப் பெற்றோரின் அனுமதியின்றி புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கக் கூடாது என்றும் அரசு விதிகள் கூறுகின்றன.

மேலும், அரசுப் பள்ளிகளை எவ்வித அரசியல் பரப்புரைக்கோ, விளம்பர நோக்கங்களுக்கோ பயன்படுத்தக் கூடாது என்று விதிகள் உள்ள நிலையில், அதனைப் பொருட்படுத்தாமல் பள்ளிக்குள் நுழைந்த தவெகவினர், அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைத் தங்களது செல்போனில் புகைப்படம், வீடியோ எடுத்துள்ளனர்.

மரக்கன்று வழங்குவது போலத் தொடங்கிய இந்நிகழ்வை, அப்படியே ஒரு அரசியல் விளம்பரப் படமாக மாற்றியுள்ளனர்.

ஒரே ஒரு செடி வழங்கி மாணவர்களுடன் எடுத்த வீடியோக்களைத் தொகுத்து, பின்னணியில் சினிமா பாடல்களை ஒலிக்க விட்டு, எம்.எல்.ஏ., நிர்வாகிகள் மற்றும் விஜய் ஆகியோரின் புகைப்படங்களுடன் கூடிய அரசியல் போஸ்டரையும் இணைத்து ரீல்ஸ் வீடியோவாக சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி விதிகளை மீறி செயல்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசுப் பேருந்து ஓட்டுநர் மீது தாக்குதல் நடத்திய த.வெ.க. நிர்வாகி கைது!

மதுரை, ஜூன் 13 -

சோழவந்தான் அருகே அரசு பேருந்து ஓட்டுநரை பட்டா கத்தியால் வெட்டிய த.வெ.க. நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார்.

பணிமனைக்கு திரும்பி கொண்டிருந்த அரசு பேருந்துக்கு வழிவிடாமல் தகராறில் ஈடுபட்ட த.வெ.க. நிர்வாகி தனுஷ் கோடி பட்டா கத்தியால் ஓட்டுநர் பிரசாந்தை தலையில் வெட்டிவிட்டு தப்பியோடினார்.

இந்நிலையில், இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தனுஷ் கோடியை உடனே கைது செய்ய வலியுறுத்தி சோழவந்தான் அரசு பேருந்து பணிமனையில் 300க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பணிமனை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக சோழவந்தான் பணிமனையில் 55 அரசு பேருந்துகள் இயங்காமல் நிறுத்தப்பட்டன. பணிக்குச் செல்வோர் உள்ளிட்ட பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.

அரசு போக்குவரத்து கழக மேலாளர்கள், போலீஸ் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். ஓட்டுநரை தாக்கிய தனுஷ்கோடி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் உறுதியளித்தனர்.

இதைத் தொடர்ந்து சோழவந்தான் போலீசார் வழக்கு பதிந்து தலைமறைவாக இருந்த தனுஷ்கோடியை தீவிரமாக தேடி வந்தனர்.

இதனிடையே கருப்பட்டி கிராமம் அருகே உள்ள தோட்டத்தில் தனுஷ்கோடி பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று தவெக நிர்வாகி தனுஷ் கோடியை கைது செய்தனர்.

ஏற்கெனவே தனுஷ் கோடி மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், குண்டர் சட்டத்தில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தற்போது தனுஷ்கோடியை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மதுரை மத்திய சிறையில் தனுஷ்கோடியை அடைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட – துறைமுகம் சட்டமன்றத் தொகுதி

பகுதிக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்!

சென்னை, ஜூன்.13-

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பகுதிக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் (12.06.2026 - வெள்ளிக்கிழமை) அன்று காலை 9.30 மணியளவில், சென்னை, ஓட்டேரி எண்.7, செல்லப்பா தெருவில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை சென்னை மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க தலைவர் கொளத்தூர் கே.ஆர்.லட்சுமிபதி பொதுக்குழு உறுப்பினர் மற்றும் பி.சீனிவாசன், டி.சுரேஷ்குமார் தலைமையில் மாதவரம் பணிமனையில் சிறப்பாக இனிப்பு வழங்கி, அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஓட்டுநர்கள்: அருள் குணலாபன், அடைக்கல் ராஜ், கருணாமூர்த்தி, பரமானந்தம், நீல் திரவியம், செந்தில், வீரபிரம்மன், சங்கர், கிருஷ்ணகுமார், சண்முகம், கார்த்தி, புகழேந்தி, கண்ணன் நடத்துநர்கள் : கரிமுல்லா, தணிகைவேல், கஜேந்திரன், ஜானகிராமன், அப்பாதுரை, தினேஷ், பூபாலன், புருஷோத்தமன், வெங்கடகிருஷ்ணன், சரவணன், மணிவண்ணன், கிருஷ்ணமூர்த்தி, வினோத், சுகுமார், இளையராஜா, செந்தில் ரமேஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். டி.ரமேஷ்பாபு நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகி என்.பி.எம். ஷேக் அப்துல்லா, தலைமை செயற்குழு உறுப்பினர் எம் விஜயகுமார், பகுதிக் கழகச் செயலாளர்கள், எஸ் ராஜசேகர் எஸ் முரளி பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர் கலைச்செல்வி எம் இப்ராஹிம் கனி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பி ஸ்ரீராமுலு பி விஜயகுமார் பா பிரதீப் குமார் எல் சம்பத் குமார் எம் விநாயகம், வட்ட கழகச் செயலாளர்கள் எல்.சத்திய நாராயணன், எஸ் புகழேந்தி, ஆர் ஏ அஸ்லாம், ம. பரத்குமார், கதிரவன் (எ) ராஜா, க.கவியரசு,ஆ.நா. பார்த்திபன், டி. சதீஷ்குமார் வே. பா. பிரபாகரன், ஜி. ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, மா ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். ரவிச்சந்திரன்,மாமன்ற உறுப்பினர்,வெ.பரிமளம் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழினத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, புத்தாடைகள், கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள் ஆகியவைகளை குன்றத்தூர் ஒன்றியக் குழு உறுப்பினர் சரஸ்வதி மனோகரன் தலைமையில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் – காஞ்சிபுரம் ஊராட்சி குழு தலைவர் படப்பை.ஆ. மனோகரன், வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.